தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 500/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 10 இதழ் : 3 ஜனவரி – 2014


2014

"...மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் (இயேசு) பெரிய காரியங்களைச் செய்வார்".

யோவேல் 2 : - 21



ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



# உங்கள் சகோதரனிடமிருந்து

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

**ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்களது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

"மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்" என்று யோவேல் **2:21** இல் சொல்லப்பட்ட வாக்குத்தத்த வசனத்தின்படி தேவன் இந்த புதிய **2014** ஆம் ஆண்டில் நீங்கள் மகிழ்ந்து களிகூரும்படி உங்கள் வாழ்க்கையிலும், குடும்பத்திலும், நீங்கள் கையிட்டுச் செய்யும் அனைத்துக் காரியங்களிலும், குறிப்பாக சபைகளிலும் ஊழியங்களிலும் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். ஆமென், அல்லேலூயா!

கடந்த **2013** ஆம் ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மைக் காத்து நடத்தி அசீர்வதித்து வந்தபடியால் தேவனைத் துதிப்போம். ஷாலோம் ஊழியப்பாதையில் எங்களையும் பீல் மக்களையும் நேசித்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கு நீங்கள் ஏறெடுத்த ஜெபங்கள், தியாகமான காணிக்கைகள், ஆதரவிற்காக தேவனுக்கு மகிமை செலுத்தி உங்களுக்கு நன்றி கூறுகிறோம். தொடர்ந்து **2014** ஆம் ஆண்டிலும் தேவசித்தத்தை ஊழியங்களில் நிறைவேற்ற உங்கள் ஜெபத்தையும், ஆதரவையும் எதிர்நோக்கியுள்ளோம்.

இந்த ஆண்டில் இதுவரை நடைபெற்ற ஊழியத்தை ஸ்திரப்படுத்த குறிப்பாக சபைகளை வசனத்திலும், உபதேசத்திலும், தரிசனத்திலும் உறுதிப்படுத்தி முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்திற்கு நேராக நடக்கத் தீர்மானித்துள்ளோம். **2017** ஆம் ஆண்டிற்குள் (**25** ஆண்டுகள்) **1000** ஸ்திர சபைகள், **1000** பீல் சுதேச ஊழியர்கள், போதகர்கள் உருவாக்கப்படும் திட்டத்தின் கீழ் இந்த **2014** ஆம் ஆண்டில் **300** பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் **300** கிராம ஆலயங்கள் கட்டப்பட, பல்லாயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

குறிப்பாக இவ்வருடம் தமிழ்நாட்டில் **1000** சபைகளைச் சந்தித்து, **1000** போதகர்களை ஷாலோம் மிஷனெரிப் பணிகளுடன் இணைந்து **2020** ஆம் ஆண்டிற்குள் முழு பீல்மக்களை தேவனண்டை நடத்த ஜெபித்து செயல்பட உள்ளோம். நீங்களும் ஆத்துமப் பாரத்துடன் எங்களுடன் இணைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்ட அன்புடன் அழைக்கிறோம்.

ஷாலோம் மிஷனெரிப் பணிகள், ஷாலோம் திருமண்டல திருச்சபைப் பணிகள், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் அனைத்துப் பணிகளுக்கு உடன் இணைந்து பணிபுரியும் தேவஜனங்களுக்காக அதிகம் ஜெபியுங்கள். ஷாலோம் ஊழியங்களை, பீல்மக்களை நேசித்து ஜெபித்து தாங்கும் உங்கள் யாவரையும், குறிப்பாக ஷாலோம் பிரதிநிதிகள், பங்காளர்களை பரலோக ஆசீர்வாதத்தினால் தேவன் நிரப்புவாராக!

என் மனைவி வஹிதா மற்றும் பணித்தள முன்னேற்றப் பணிகளை குறிப்பாக கல்விப் பணியை ஏற்று நடத்தும் அன்பு மகன் டைட்டஸ் மற்றும் மெர்லினுக்காக தேவனைத் துதித்து ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் இம்மாத இறுதியில் மகன் ஷாலோம் பணித்தளத்தில் Media-துறையில் இணைந்து பணிகளை நிறைவேற்றுவார். ரஷ்யாவில் 4 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கும் அன்பு மகள் ஜாய் ஷெக்கினாவிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்


"கர்த்தர்தாமே ஆராய்ந்து முடியாத பெரியகாரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் (யோபு **5:9**)" உங்கள் வாழ்வில் **2014** ஆம் ஆண்டு முழுவதும் செய்து ஆசீர்வதிப்பாராக!

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : **09377445468** (குஜராத்)

# பெரிய காரியங்களைச் செய்யும் கர்த்தர்



புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் என் குடும்பத்தின் சார்பிலும் ஷாலோம் ஊழியங்கள் சார்பிலும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இப்புதிய 2014 ஆம் ஆண்டின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தபோது தேவன் யோவேல் 2:21 ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருந்த வாக்குத்தத்த ஆசீர்வாதத்தை வெளிப்படுத்தினார். விஷேசமாக தேவஜனங்களுக்கு கர்த்தர் தந்த வசனமாகிய **"மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்"** என்பதே அந்த செய்தியாகும்.

## 2014 ஆம் ஆண்டு மகிழ்ந்து களிகூரு

கர்த்தர் இந்த புதிய ஆண்டில் பெரிய காரியங்களை நமக்குச் செய்வதற்கு முன்பாக நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? நாம் மகிழ்ந்து களிகூர வேண்டும் என்பதுவே. முதலாவது நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் மகிழ்ந்து களிகூருவோம். கர்த்தரை தெய்வமாகக் கொண்டுள்ள ஜனம் பாக்கியமுள்ளது அல்லவா? தேவன் நமக்குத் தந்த விலையேறப் பெற்ற இரட்சிப்பிற்காக தேவனைத் துதிப்போம். நமக்காக தேவன் அருளின சொல்லிமுடியாத ஈவாகிய இயேசுகிறிஸ்துவை நினைத்து மகிழ்ந்து களிகூருவோம்.

தேவன் தந்த ஊழியங்கள், சபைகளுக்காக தேவனை துதித்து மகிழ்ந்து களிகூருவோம். உயிர்த்தெழும் நம்பிக்கைக்காக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக, பரலோக இராஜ்ஜியத்தின் நித்திய மகிமையின் ஆசீர்வாதங்களுக்காக மகிழ்ந்து களிகூருவோம். தேவன் தந்தருளின பரிசுத்த ஆவியானவருக்காக, உன்னதமான அனுபவங்களுக்காக மகிழ்ந்து களிகூருவோம். நம் வாழ்வில், குடும்பத்தில், ஊழியத்தில் தேவன் போதுமானவராக இருந்தாரே! தேவன் தந்த நன்மைகள், ஆசீர்வாதங்கள், சுகபெலன், பாதுகாவல், பராமரிப்பு இவைகளை எண்ணி துதித்து மகிழ்ந்து களிகூருவோம்.

பிசாசானவன் இந்த எல்லா நன்மைகளையும் மறக்கச் செய்து, நம் வாழ்க்கையில் இழப்புகள், பிரச்சினைகள், வேதனைகள், தோல்விகள் போன்றவற்றை மட்டுமே பெரிதாகக் காட்டி, தேவ அன்பை விட்டு நம்மைப் பிரிந்துபோகச் செய்வான். ரோமர் 8 : 28–29 வரை வாசித்துப் பாருங்கள். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதல்லவா! ஆகையால் மகிழ்ந்து களிகூருங்கள். இந்த வேதப்பகுதியில் சொல்லப்பட்ட 5 கேள்விகளை பிசாசுக்கு எதிராகப் பேசும்போது தேவசமாதானமும், சந்தோஷமும் உங்கள் இருதயத்தில் பெருகும்.

நாம் கிறிஸ்துவில் மகிழ்ந்து களிகூரவேண்டும், ஏனெனில் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாகயிருப்பவன் யார்? இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாகயிருப்பவன் யார்? (ரோமர் 8:32)

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32) தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். (ரோமர் 8:33)

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோ. 8 : 36 – 39)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவஜனமே, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே உங்கள் பெலன் என்று கர்த்தருடையஆவியானவர் நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார். ஆகவே புதிய ஆண்டிலே பழையவைகளை மறந்து, தேவையில்லாத காரியங்களை விட்டுவிட்டு, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள். குடும்பமாக சபையாக தேவனை ஆராதித்து துதித்து மகிழ்ந்து களிகூரும்போது தேவன் நம் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்வார்.

மகிழ்ந்து களிகூரு என்று உரைத்த தேவன் பெரிய காரியங்களைச் செய்வேன் என்று வாக்களிக்கிறார். நாம் மகிழ்ந்து களிகூரும்போது உண்மையாக அவர் எப்படிப்பட்ட பெரியகாரியங்களைச் செய்வார் என்பதை யோவேல் 2: 21–32 வசனங்களில் திருவுளம் பற்றியுள்ளார். இப்புதிய 2014 ஆம் ஆண்டில் தேவ ஜனத்திற்கும் ஊழியங்களுக்கும், தேசத்திற்கும் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை தியானிப்போம்.

## இழந்து போனவைகளை பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம்

யோவேல் 2: 25 ஐ வாசித்துப் பாருங்கள். வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார். தேவனுடைய ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப்

பாவம் செய்து அவரைத் துக்கப்படுத்தி கர்த்தருடைய வழிகளை விட்டு விலகிய போது தேவன் பல சிட்சைகளை அனுப்புகிறார். தங்கள் பாவத்தின் விளைவாக அநேக இழப்புகளையும், புற ஜாதிகள் நிந்திக்கத்தக்கதாக அவமானங்களையும் சந்தித்தது மட்டுமல்ல, சிறையிருப்பின் கட்டுகளிலும் வேதனைப்பட்டார்கள்.

தேவ ஜனங்களும், ஆசாரியர்களும் மனந்திரும்பி அழுது கதறி வேண்டிக்கொண்டபோது, தேவன் திரும்பவும் மனதுருகி சிறையிருப்பை மீட்டு, நிந்தைகள், அவமானங்களை மாற்றியமைத்து, இழந்து போன விளைச்சலின் நன்மைகள், பொருளாதார வீழ்ச்சிகளை நீக்கி தேவன் தனது ஆசீர்வாதத்தைத் திரும்பத் தரும்படியாக வாக்குக் கொடுக்கிறார். ஆகவே பயப்படாதே,மகிழ்ந்து களிகூரு என்றுரைத்து நம்மை மகிழப்பண்ணுகிறார். எனக்கன்பான தேவ ஜனமே, கடந்த ஆண்டில் பல இழப்புகள், துன்பங்கள் மற்றும் நிந்தைகளைக் கடந்து வந்தது மட்டுமல்லாமல் பொருளாதார இழப்புகளையும் சந்தித்திருக்கலாம். இந்தக் காரியங்களெல்லாம் நம் வாழ்வில், குடும்பத்தில், ஊழியப்பாதையில் ஏன் நடந்தது என மனப்பாரத்துடன் காணப்படலாம். **“நீ எவைகளை இழந்தாயோ அவைகளை உனக்கு இந்த வருடத்தில் கூட்டித் தருவேன்”** என்று உன் மீது மனதுருகும் கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலே நான் உன்னை மறப்பதில்லை. எப்பிராயீமே உன்னை எப்படிக் கைவிடுவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

புதிய ஆண்டில் நம்மை குடும்பமாய் ஒப்புக்கொடுக்கும்போது நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்பத்திலும் நல்ல காரியங்களைக் கர்த்தர் நிறைவேற்றுவார். நம்முடைய தவறுகள் மற்றும் குறைகளை மன்னித்து நம் மீது மனதுருகி இழந்துப்போன எந்தக் காரியத்தையும் மீட்டு, பழைய நிலைமையைக் காட்டிலும் நம்மை அதிகமாய் உயர்த்துவார். எனவே மனம் கலங்கி பயப்பட வேண்டாம். மகிழ்ந்து களிகூருங்கள்.

## சம்பூரணமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் வருஷம்

நாம் மகிழ்ந்து களிகூரும்படியாக தேவன் சம்பூரணமான ஆசீர்வாதத்தைத் தருகிறார். யோவேல்: 2:26 ஐ வாசித்துப் பாருங்கள். நீங்கள் சம்பூரணமாக சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த கர்த்தரைத் துதிப்பீர்கள். கர்த்தர் அதற்காகத் தரும் ஆசீர்வாதங்களை வாசித்துப்பாருங்கள். மேய்ச்சல்கள், விளைவின் பலன் (வசனம்22). முன் மாரியும், பின் மாரியும் தக்க அளவில் ஏற்ற காலத்தில் ( வசனம் 23) நிரம்பி வழிந்தோடும்படி ஆசீர்வாதத்தைத் தருவேன் என்கிறார். (வசனம் 24) இந்த 2014 ஆம் வருஷத்தில் தேவன் சம்பூரண ஆசீர்வாதத்தினால் நம்மை நிரப்பி திருப்தியாக்கும் வருஷமாக விளங்கப்பண்ணுவார். நம்முடைய கையின் பிரயாசங்கள், நமக்குத் தந்த வேலைகள் போன்றவற்றைத் தேவன் ஆசீர்வதித்து நமக்குத் தந்த தொழிலை அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவார்.

சபைகளிலும், ஊழியப்பாதைகளிலும் ஆத்துமாக்கள் பெருக்கத்துக்குத் தக்கதாக நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுவார். நல்ல நிலங்களிலும், இடத்தையும், ஆலயகட்டிடங்களைத் தேவன் வாக்குத்தத்தம் செய்த திட்டங்களை நிறைவேற்ற கிருபை தருவார்.

ஆபிரகாம் ஒருவனாக இருந்த வேளையில் அவனை அழைத்து, ஆசீர்வதித்து பெருகச் செய்த கர்த்தர் (ஏசா: 51 : 2) நம்மையும் அப்படியே பெருகச் செய்வார். அப்போஸ்தல சபையார் மேல் இருந்த பூரண கிருபையை நம் மீதும் ஊற்றுவார். (அப் : 4 : 35)

இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் தேவன் நம்மீது ஊற்றும் போது என் ஜனங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை என்று இருமுறை (வசனம் 26, 27) வாக்குக் கொடுக்கிறார். எனக்கன்பானவர்களே, எந்தக் காரியத்தில் வெட்கப்பட்டு நிந்தைகளை சுமந்தோமோ, யார் முன்னிலையில் தலைகுனிந்து விட்டோமோ, அவர்கள் நடுவில் ஆண்டவர் நம்மை சாட்சியாக நிறுத்துவார். நமக்கு விரோதமாக நின்றவர்கள் நம் பட்சமாக வருவார்கள். நமக்கு விரோதமாக இச்சகம் பேசியவர்கள் கூடி நம்மிடம் வருவார்கள். தேவன் தந்த வாக்குத்தத்தத்தைப் பிடித்து விசுவாசத்துடன் ஜெபியுங்கள்.


தேவன் சம்பூரண ஆசீர்வாதங்களை உங்கள் மீதும் ஊழியத்தின் மீதும் ஊற்றும் போது நீங்கள் வாலாகாமல் தலையாவீர்கள், கீழாகாமல் மேலாவீர்கள். நான் உனக்குத் துணை நிற்கிறேன். நீ வெட்கப்பட்டுப் போவதில்லையென வாக்குத் தருகிறார். யோசேப்பைப் போல் அநேகப் பாடு மற்றும் துன்பங்களைக் கடந்து வந்தாலும் அவன் சிறையிருப்பை மாற்றி, சிங்காசனத்திற்கு நேராக உயர்த்தி, தன் குடும்பத்திற்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக வைத்த தேவன் உங்களையும் சம்பூரண ஆசீர்வாதங்களால் நிரப்பி, உங்கள் அனைவரையும் திருப்தியாக்கி, நீங்கள் தலை நிமிர்ந்து வாழும்படிச் செய்வார். ஆகையால் அனைவரும் மகிழ்ந்து களிகூருங்கள்.

## உன்னதமான ஆசீர்வாதங்களை நிரப்புதலின் வருஷம்

யோவேல் 2: 28–32 வரையுள்ள வசனங்களில் தேவன் அருளும் உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை வாசிக்கிறோம். ஆகவேதான் தேவன் மகிழ்ந்து களிகூரு என்று சொல்லி நம்மை ஆசீர்வதிக்கிறார். முதலாவது நான் மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குரைக்கிறார். இவ்வருடத்தில் தேவன் தம்முடைய பலத்த ஆவியின் அபிஷேக அருள் மாரியை சபைகள் மீதும் தேவ ஜனங்கள் மீதும் ஊற்றப்போகிறார். ஆவியானவர் எங்கு உண்டோ அங்கே விடுதலையும் உண்டு. மட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவர் வரும்போது கிடைக்கும் சமாதானம், சந்தோஷம் நம்மை நிரப்புவதால் நாம் மகிழ்ந்து களிகூருவோம். ஆவியானவரால் நிரப்பப்பட்டு அந்நியபாஷைகளை தேவன் தரும்போது நாம் தேவனுடன் உறவாடும் பாக்கியத்தைத் தருகிறார். பீல் ஆதிவாசி ஜனங்கள் குடித்து வெறித்து கொள்ளையடித்தவர்கள், மந்திரப் பூஜைகளைச் செய்து பிசாசின் பிடியில் வாழ்ந்தவர்கள். இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் நிறைவிற்காகக் காத்திருந்து ஜெபித்தபோது அவர்களை தேவன் ஆவியினாலே நிரப்பினார். இன்று அவர்கள் உள்ளடங்கிய கிராமங்களில் கட்டப்பட்ட சபைகளில் மிக எளிமையாக இருந்தாலும் ஆவியில் நிரம்பி ஆராதித்து, நடனமாடி துதித்து மகிழ்ந்து களிகூருவதைக் காணும்போது எத்தனை மகிழ்ச்சி! அப்படிப்பட்ட ஆனந்த தைலத்தின் அபிஷேகத்தினால் தேவன் உங்களை இந்த வருடம் முழுவதும் நிரப்புவாராக!

மட்டுமல்லாமல் இந்த உன்னதமான அபிஷேகம் நம் குமாரர்கள், குமாரத்திகள், வாலிபர்கள், மூப்பர்கள் போன்றோர் மீது தேவன் ஊற்ற வாஞ்சிப்பது மட்டுமன்றி ஆவிக்குரிய வரங்களினால் நிரப்பவும் விரும்புகிறார். தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள், தரிசனங்களைக் காணும் அனுபவங்களை தேவன் நம் சந்ததிக்கும், சபைக்கும் கொடுக்கப்போகிறார். ஊழியக்காரர்கள் ஊழியக்காரிகள் மீது கடைசிகால எழுப்புதலின் ஊழியத்திற்காக அக்கினி அபிஷேகத்தை ஊற்றுவார். இந்த வருடம் அதன் மூலமாக திரளான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபைகள் வளர்ந்து ஆத்துமாக்கள் பெருகவும், நம் தேசத்திற்கு பெரியக் காரியங்களையும் தேவன் செய்வார்.

கடைசியாக, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான அடையாளங்களை மிக பிரதியட்சமாகக் காணப்போகிறோம். உலகத்தில் உள்ள ஜனங்கள் தத்தளிக்காமல் அவர்களும் இரட்சிக்கப்பட்டு நாமும் சேர்ந்து மகிழ்ந்து களிகூறுவோம். ''வாரும் தூய ஆவியே'' என்று தாகத்துடன் இவ்வருடத்தில் காலடி வைக்கும் போதே நம்பிக்கையோடு கேட்போம். உன் மீதும், உன் சந்ததியின்மேல் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குரைத்தவர் பரிசுத்த ஆவியினாலும், வரங்களினாலும், பரிசுத்த ஆவியின் கனிகளாலும் நம்மை நிரப்புவார். பயப்படாமல் மகிழ்ந்து களிகூறு, கர்த்தர் பெரிய காரியங்களை புதிய ஆண்டாகிய 2014 ஆம் வருடத்தில் உங்களுக்குச் செய்வார். ஆமென்! அல்லேலூயா!




## ஷாலோம் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை

தேவ நாமம் மகிமைப்படுவதாக. கர்த்தருடைய மாபெரும் தயவால், தூத்துக்குடியிலுள்ள நம் ஷாலோம் ஊழியத் தலைமை அலுவலகத்தின் மூலமாக, முதன்முதலாக கிறிஸ்துமஸ் கேரல் நிகழ்ச்சி நடைபெற்றது . கடந்த 6.12.13 மாலை சுமார் 6.30 மணி முதல் 8.30 மணி வரை ராஜ் மஹாலில் வைத்து வெகு சிறப்பாக ஜெபத்துடன் நடைபெற்றது.

தூத்துக்குடியில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தேவப்பிள்ளைகள் இதில் பங்கு பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் **Choreography,** சிறுபிள்ளைகளின் நடனம் மற்றும் அலுவலக சகோதரிகளின் நடனம் மிகவும் சிறப்பாக இருந்தது.

பீல் மக்கள் மத்தியில் நடைபெற்று வரும் நம் ஷாலோம் ஊழியங்களைக்குறித்து **Vedio** மூலம் எல்லோருக்கும் நம் தலைமை அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் விளக்கமாகக் காண்பித்ததோடு, அனைவரின் மத்தியிலும் ஷாலோம் ஊழியங்களைக்குறித்தும் மிகச் சிறப்பாக விளக்கிக் கூறினார். பலர் ஆத்துமப்பாரம் கொண்டு ஆசீர்வாதத்துடன் சென்றனர். பாடல்களை **முத்துநகர் பாடல் குழுவினர்** சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். அனைத்து நிகழ்ச்சிகளையும் **சகோ. அற்புதராஜ் மர்காஷியஸ்** அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆரம்பம் முதல் முடிவுவரை நிகழ்ச்சிகளை ஆசீர்வாதமாகத் தந்த தேவனுக்கே மகிமை. இந்நிகழ்ச்சிக்காக ஒத்துழைப்பும், ஆதரவும் தந்த அனைவருக்கும் தேவ நாமத்தினால் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***கவிதைச்சோலை***



## மகிழ்ந்து களிகூறு

## கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்

ஆட்டை மேய்த்த தாவீதை
நாட்டை ஆளும்படி செய்த கர்த்தர்

வழியில் விழுகாமல் தாங்கி நம்மை
குழியில் இருந்து தூக்கி விட்டு

பெரிய காரியங்களை நமக்காக
உரிய நேரத்திலே செய்திடுவார்.

சிறிய மனிதனையும் முன்குறித்து
அரிய வாய்ப்புக்களைத் தந்திடுவார்!

மொழி அறியா இடத்திலும் பயன்படுத்தி
வழி வாசல்களைத் திறந்திடுவார்!

களி கூர்ந்து மகிழும்படி அற்புதமாய்
வெளி ஊழியங்களைப் பெருக்கிடுவார்!

முடிக்காத ஊழிய வேலைக்கென
படிக்காத பேதுருவைத் தெரிந்தெடுத்தார்!

எலியா சாகும்படி சூரைச்செடியின்
கீழ் படுத்திருந்தும்
அழியா வரம் கொடுத்து போஷித்தவர்

காகம் மூலமும் உணவளித்து
தாகம் தீர்த்தார் நம் தேவன்!

இமயம் மலை எவரெஸ்ட் சிகரத்தைவிட
சமயம் பார்த்து பெரிய காரியங்களை!

ஒவ்வொரு முன் குறித்த காலத்திலும்
வெவ்வேறு சூழ்நிலையில் உதவிடுவார்!

மங்கி எரிகின்ற தீபத்தை
தாங்கி அணையாது காத்திடுவார்!

நெறிந்த நாணலை முறிக்காமல்
அறிந்த பிள்ளைகளை வாழவைப்பார்!

கண்ணீரை கண்டதும் ஆகாருக்கு
தண்ணீரை குடிக்கக்கொடுத்தாரே!

தரிசனம் தந்தவர் மறக்கவில்லை
கரிசனை இன்னும் வைத்துள்ளார்!

வல்ல தேவன் நமக்காக
சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும்!

வேதனை வருகின்ற நேரங்களில்
நாதனை நினைத்து ஜெபித்து வந்தால்!

தூதனை நமக்காக அவர் அனுப்பி
சோதனை யாவையும் போக்கிடுவார்!

தீயும் ஒன்றும் செய்யாது
பேயும் பூதமும் ஓடிவிடும்!

தாயும் தகப்பனும் பிள்ளைகளும்
சேயும் நலமுடன் வாழ்ந்திடலாம்!

எழில் நிறைந்த அவர் அருளால்
தொழில் பெருகி வளர்ந்து விடும்!

தளர்ந்து போன ஊழியங்கள்
வளர்ந்து பன்மடங்கு கனிகொடுக்கும்!

ஓரம் கட்டி ஒதுக்கப்பட்ட
பாரம் சுமக்கும் அனைவரையும்!

வரம் கொடுக்கும் இயேசு நாதர்
கரம் பிடித்து நடத்திடுவார்!

உதவி அற்ற எளியவர்க்கு
பதவி கொடுத்து வாழ வைப்பார்!

அனைத்து பாடுகளிலும் அவர் நம்மை
நினைத்து கிருபையால் தேற்றிடுவார்!


மெய்யாய் வாக்குத்தத்தம் நிறைவேறி
நெய்யாய் பொழிந்திடும் பாதைகளில்!

நன்மையால் வருஷத்தை முடிசூட்டி
மேன்மையால் தாங்கி உயர்த்திடுவார்!

களைத்தவர் பெலனற்றோர், ஏழைகளை
அழைத்தவர் திடன் கொடுத்து எழுப்பிடுவார்!

வாக்கியம் யோவேல் 2:21 இல்
காண்பவைகள்
பாக்கியம் நமக்குத் தருகின்றதால்

தினமும் மகிழ்ந்து களிகூறு
கனமும் மேன்மையும் கர்த்தருக்கே!



**Rev. S. சந்திரகுமார்,**
தூத்துக்குடி



## இயேசு விடுவிக்கிறார் மூலமாக வழங்கப்பட்ட சிறந்த பங்காளர் விருது (26.10.2013)

இயேசு விடுவிக்கிறார் (நாலுமாவடி) ஊழியத்தின் 35வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் (திறப்பின் வாசல் ஜெபம் – 26.10.2013) ஊழியப்பாதையில் சிறந்த பங்காளராக இணைந்து ஷாலோம் ஊழியங்கள் செயல்படுவதைக் கனப்படுத்தி சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மூலம் பிஷப். தேவதாஸ் அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. இதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறோம்!



## Seva Bharat ஸ்தாபனத்தின் மூலம் சிறப்பு விருதுகள்

**Seva Bharat** ஸ்தாபனம் திருச்சபை ஸ்தாபிக்கும் ஸ்தாபனங்களுக்கு **ICT**, முதியோர் கல்வித் திட்டம், மற்றும் VBS போன்ற திட்டங்களைத் தந்து ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.





டிசம்பர் 3 முதல் 6 வரை ஹைதராபாத்தில் நடைபெற்ற **Seva Bharat Conference** - ல் **Sharing Love Mission** -க்கு சிறந்த விருதையும், பேராயர். தேவதாஸ் அவர்களுக்கு சிறந்த தலைமைத்துவத்திற்கான சிறப்பு விருதையும் வழங்கி கௌரவப்படுத்தினார்கள்.

## இந்திய வேதாகமச் சங்கத்தின் மூலம் சிறப்பு விருது



இந்திய வேதாகமச் சங்கத்தின் (BSI) குஜராத் கிளை மூலமாக 14.11.2013 அன்று நடைபெற்ற வருடாந்திரக் கூடுகையில், கடந்த 2013 ஆம் ஆண்டில் அதிகமான வேதப்புத்தகங்களை வாங்கி விநியோகம் செய்த நம் ஷாலோம் ஊழியங்களுக்கான சிறப்பு விருதை (Special Distribution Award) Rev. நிக்கோலஸ் பர்மார் (Ex. General Secretary BSI) அவர்கள் வழங்கினார்கள். இதில் குஜராத் திருமண்டல CNI பேராயர், சில்வான்ஸ் கிறிஸ்டியன் மற்றும் Rev. டேவிட் H. தேசாய் (BSI General Secretary) அவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.



# சகோ. ஜீவா (மார்த்தாண்டம்) அவர்களின் பணித்தள வருகை



கலாச்சார வரவேற்பு


காளகேத் கிராம சபையில், செப்தியளிக்கும் சகோ. ஜீவா அவர்கள்




பேடவ், கிராமத்தில் நடைபெற்ற சிறப்புக் கூடுகையில் (இராஜஸ்தான்)


பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்களுடன்


மத்தியப்பிரதேசத்தில் கேகுடா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்தின் முன்பு


வால்பூர் கிராம சபையில் கூடியிருந்த தேவ ஜனங்கள் (ம.பி.)


விசுவாசிகளுக்கான சிறப்பு ஜெபத்தினை ஏறெடுக்கும் சகோ. ஜீவா அவர்கள்

## சகோ. ஜீவா அவர்களின் பணித்தளப் பார்வை அறிக்கை
## *சோர்ந்து போகாமல் ஆராதிக்கும் பீல் ஆதிவாசிகள்!*

கர்த்தருடைய சித்தத்தின்படி கடந்த டிசம்பர் மாதம் 3 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியத்தின் பணித்தளத்தைப் பார்வையிட தேவன் உதவி செய்தார். 2 ஆம் தேதியன்று பணித்தளத்தைச் சென்றடைந்தேன். 3 ஆம் தேதி குஜராத் மாநிலத்திலுள்ள குந்திகேடா, தனசியா, போரடி, தெல்சர் ஆகிய சபைகளைப் பார்வையிடவும், ஊழியரின் குடும்பத்தைச் சந்திக்கவும் தேவன் கிருபை செய்தார். அதே நாளன்று ஜெரி ஷாலோம் கிராம சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள **சகோ. ஸ்டீபன்** அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். இக்கூட்டத்தில் சுமார் 180 பேர் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெற்றார்கள்.

4 ஆம் தேதி **சகோ. ஜெயராஜ்** அவர்களுடன் மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா, நவாப்பாடா ஆகிய சபைகளைப் பார்வையிட்டோம். பின்பு காளாகேத் ஷாலோம் கிராம சபையில் செய்தியளிக்க **சகோ. ஜெயராஜ்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள். இக்கூட்டத்தில் 120 பேர் பங்கு பெற்றார்கள். 5 ஆம் தேதி குஜராத் மாநிலம் சோட்டா உதயப்பூர் தாலுகாவிலுள்ள தேவ்கட் ஷாலோம் கிராம சபையில் நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 200 பேர் பங்கு பெற்றார்கள். செய்தியை **சகோ. சாமுவேல்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள்.

மேலும் 6 ஆம் தேதி மத்தியப்பிரதேசத்திலுள்ள வால்பூர் என்ற கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற கூட்டத்தில் செய்தியளிக்க தேவன் கிருபைச் செய்தார். இக்கூட்டத்தில் சுமார் 200 பேர் பங்குப் பெற்றனர். செய்தியை **சகோ. சாமுவேல்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள். மேலும் அந்தப் பகுதியிலுள்ள தெல்வானி என்ற இடத்தில் நடைபெறும் வீட்டு சபையையும், ஆலயக் கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் கெகுடா என்ற இடத்தையும் பார்வையிட்டோம். 7 ஆம் தேதி இராஜஸ்தானிலுள்ள கும்புரா, கொய்கா மற்றும் பிஜல்பூரிலுள்ள ஷாலோம் பள்ளியைப் பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து பேடவ் என்ற ஷாலோம் கிராம சபையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்கு பெற்று செய்தியளித்ததை **சகோ.சாமுவேல்** மொழிப்பெயர்த்தார்கள்.

மறுநாள் ஓய்வுநாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்று குஜராத்திலுள்ள வரம்கேடா–1 & 2 கிராம சபையில் நடைபெற்ற ஆலய ஆராதனையில் சிறிது நேரம் பங்கு பெற்று வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டேன். அதைத் தொடர்ந்து பாட்டன்புரா என்ற கிராமத்திலுள்ள ஷாலோம் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று தேவ செய்தியளித்தேன். சுமார் 150 பேர் ஆராதனையில் பங்கு பெற்றார்கள். மறுநாள் பணித்தள அலுவலகத்தில் நடைபெறும் தியான நேரத்தில் பங்கு பெற்று தேவ செய்தியளித்தேன். அந்த ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்தேன். பீல் விசுவாசிகளுக்கென்று 250 வேதாகமங்களை வழங்க தேவன் கிருபை தந்தார். அதைத் தொடர்ந்து குஜராத்திலுள்ள பாரேவா கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கு பெற்று தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டேன். **தேவனுக்கே மகிமை!**

ஷாலோம் ஊழியத்தில் என்னைக் கவர்ந்தது என்னவென்றால் இந்த பீல் ஆதிவாசி மக்கள் செய்யும் ஆராதனைதான். எவ்வளவு நேரமானாலும் சோர்ந்து போகாமல் தேவனை ஆடிப்பாடி ஆராதிக்கிறார்கள். தேவனை உண்மையாய் நேசிக்கிறார்கள். இந்த 7 நாட்கள் பணித்தளத்தைப் பார்வையிட்டதில் எத்தனையோ இடங்களில் கட்டி முடிக்கப்படாத ஆலயங்கள் மற்றும் ஆலயக் கட்டிடம் தேவையுள்ள இடங்களைக் காண முடிந்தது. இந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார். 2020 ஆண்டிற்குள் 100 சபைகளையும், 1 இலட்சம் வேதாகமங்களையும் வழங்க வேண்டும் என்ற திட்டத்தை தேவன் தெளிவாகப் வெளிப்படுத்தினார்.

இங்கு சுதேச ஊழியர்கள் மிகவும் உற்சாகமாய் ஊழியம் செய்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வீதம் வருடத்திற்கு 4 எழுப்புதல் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் திட்டங்களைத் தந்திருக்கிறார். இதை வாசிக்கிற அன்பு வாசகர்களே தேவைகள் அதிகமுள்ள இந்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியத்தை நாம் நம்முடைய ஜெபத்தினாலும், காணிக்கைகளாலும் தாங்குவோம். நிச்சயம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

## *ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்*

நாள் : **18.01.2014 (சனிக்கிழமை)**



நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.**

**தேவ நாமம் மகிமைப்படுவதாக.** வருகிற 9.1.2014 அன்று **Pr. ஜோசப் பால சந்தர்** அவர்களின் தலைமையில் மதுரையில் **நல்ல சமாரியன் சபையில்** வைத்து காலை **11 மணிமுதல் 1.30** மணிவரை மதுரை போதகர் ஐக்கியக் கூட்டம் நடைபெறும். இதில் நம் ஷாலோம் மிஷன் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் செய்தியளிப்பார்கள். சபைப் பாகுபாடின்றி அனைவரும் கலந்து கொள்ளும்படி தேவ நாமத்தினால் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு : **Pr. ஜோசப் பாலசந்தர்**
போன் : 0452–2568060

---

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக!** பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் சுதேச ஊழியரை தேவன் தொடர்ந்து எழுப்பி வருகிறார். வருகிற 12.1.2014 அன்று திருச்சியிலுள்ள **All Nation Christian Worship Centre** சபையில் வைத்து மிஷனெரி பிரதிஷ்டை நடைபெறுகிறது. இதற்காக அனைவரும் ஜெபித்துக்கொள்ளவும்.

**Pr. ரூபஸ்**
All Nation Christian Worship Centre, Trichiy




தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் 2013 ஆம் வருடத்திற்கான ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமுகாம் குஜராத்தில் “ஆனந்த்” பட்டிணத்தில் நவம்பர் 18 முதல் 21 வரை மிக ஆசீர்வாதமாக அமைந்தது. அதற்கு முன்பாக 1 மாத காலமாக வாரந்தோறும் உபவாச ஜெபங்கள், பகுதிவாரியாக சுதேச ஊழியர்கள் குடும்பங்களின் உபவாச ஜெபங்கள் மற்றும் தலைமை அலுவலகம், பணித்தள அலுவலகங்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் யாவரின் ஜெபங்களையும் கர்த்தர் கேட்டு அவரே மிக ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார்.

18 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று அதிகாலையிலே சுதேச ஊழியர்கள் குடும்பம் குடும்பமாக குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் இருந்து பிரயாணப்பட்டு வந்தடைந்தார்கள். “ஆனந்த்” பட்டிணத்தில் உள்ள “பெராக்கா மையத்தில்” அனைத்து ஊழியர்கள், ஊழியக்காரிகள் சுமார் 1000 பேர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் கூட்ட ஒழுங்குகள் செய்யப்பட்டு இருந்தது.

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி இந்த வருடம் பாளையங்கோட்டையிலுள்ள துதியின் கோட்டை சபையின் தலைமைப் போதகர் **Rev. Dr. ரத்தினம் பால்** அவர்கள், **சகோ. ஜட்சன் ஆபிரகாம், சகோதரி. ப்ரித்தா ஜட்சன்** (Gift of Jesus Ministries, வராங்கல்) மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் **சகோ. ஜெபசிங், சகோ. ஜாண் கிங்ஸ்லி, சகோ. ஜோசுவா** அவர்களும், மும்பை பட்டிணத்திலிருந்து **பாஸ்டர். டேனியல்** அவர்கள் ஆராதனை மற்றும் சிறப்புச் செய்தி வழங்கும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த முகாமில் 4 நாட்களும் பாடல்கள் மற்றும் ஆராதனை வேளைகளை பொறுப்பேற்று நடத்தும்படியாக **பாஸ்டர். டேனியல்** (மும்பை) அவர்களுடன் 5 பேர்கள் குழுவாக வந்து சிறப்பாக நடத்தித் தந்தார்கள். அழகான இசைக் கருவிகளுடன் இசை இசைத்து, நடனமாடி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். பரலோகத்திலிருந்து தேவப் பிரசன்னம் இறங்கி வந்தது. உள்ளடங்கிய கிராமங்களிலிருந்து வந்திருந்த போதகர்கள், ஊழியர்களின் குடும்பங்கள் தங்கள் கவலைகளையெல்லாம் மறந்து தேவனைத் துதித்தார்கள். மேலும் ஆராதனை வேளையில் பயபக்தியுடனும், கண்ணீருடனும் தேவனை ஆராதித்த காட்சி மறக்க முடியாததாயும், ஆராதனையின் உச்சகட்டமான அர்ப்பணிப்பின் வேளையில் அனைவரும் தேவனுக்கு முன்பாகத் தங்களை முழு மனதுடன் ஒப்புக்கொடுத்தார்கள்.

பரலோக தேவனை துதித்துத் ஆராதித்து பரிசுத்த ஆவியானவரை வரவேற்ற பின், கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துக்கொள்ளும்படியாய் அழைக்கப்பட்டிருந்த ஊழியர்கள் அனைவருக்கும் பீல் மக்களுக்கே உரித்தான கலாச்சார வரவேற்பின்படி தலைப்பாகைகளை கட்டியும், சால்வைகள் மற்றும் மலர் மாலைகளை அணிவித்தும் உற்சாகமாக வரவேற்றார்கள். முதல்முறையாக வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் தேவ பிரசன்னத்தில் நிறைந்தவர்களாய், தேவனை மகிமைப்படுத்தி பரவசமடைந்தார்கள்.

**சகோ. ஜட்சன் ஆபிரகாம்** அவர்கள் மூன்று செய்திகளை எடுத்து "ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவேண்டும்" என்ற தலைப்புகளில் செய்திகளை வழங்கினார்கள். விசேஷமாக ஊழியர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்து சோர்வுகள், பெலவீனங்கள், தனிமை போன்ற பிரச்சனைகளைக் கடந்து வந்த ஊழியர்கள் சிலரை பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் மேடைக்கு அழைத்து, அவர்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தி, விடுதலை தந்து, வாக்குத்தத்தங்களைக் கொடுத்து ஆவியானவர் பலப்படுத்தியது அனைவருக்கும் மிக உற்சாகமாக அமைந்தது. மேலும் பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த வல்லமை அனைவரின் மீதும் இறங்கி வந்தது.

**சகோதரி. ப்ரித்தா ஜட்சன்** அவர்கள் "பரிசுத்த ஆவியானவரின் எண்ணெய் அபிஷேகம், பரிசுத்த ஆவியானவரின் பலத்த காற்று" போன்ற தலைப்புகளில் தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். தேவன் அவர்களுக்குக் கொடுத்த கிருபையின்படி ஆவிக்குரிய விசேஷித்த அபிஷேகம் காற்றாக, அக்கினியாக இறங்கி வந்தது. அனைத்து ஊழியர்களும் உன்னதமான அனுபவத்தில் கடந்து வந்தார்கள். அநேகக் கட்டுகள், பிரச்சினைகள் நீங்கி அநேகர் புதிய அபிஷேகத்தினாலும், ஆவிக்குரிய வரங்களினாலும் நிரப்பப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக இறங்கி வந்ததை அதிகமாய் கண்டோம். தேவனுக்கே மகிமை! **சகோ. ஜட்சன் ஆபிரகாம்** மற்றும் **சகோதரி. ப்ரித்தா ஜட்சன்** அவர்களும் கொடுத்த செய்திகளை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மிக நேர்த்தியாக, ஆவியின் நிறைவுடன் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணமாக மொழியாக்கம் செய்தார்கள்.

சிறப்புச் செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த போதகர் **Rev. Dr. ரத்தினம் பால் (துதியின் கோட்டை, பாளைங்கோட்டை)** அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். நம் தேசத்தில் திருச்சபைக்கு தேவன் கொடுத்த ஒரு நல்ல மேய்ப்பனும், ஆவிக்குரிய தகப்பனுமாயிருக்கிறார். அவர்கள் தேவனுடன் தங்களுக்கு உள்ள உறவு, அன்பு, ஜெபம் மற்றும் ஆவிக்குரிய சொந்த அனுபவங்களை வசனத்துடன் பேசியபோது அநேக பீல் சுதேச ஊழியர்கள் செய்தியின் மூலமாக நல்ல மேய்ப்பர்களாக, ஊழியர்களாக உருவாக்கப்பட்டார்கள்.

அவர்கள் முதல் செய்தியாக **"மோசே எப்படிப்பட்ட ஊழியத்திற்காக அழைக்கப்பட்டார்"** என்பதை பிரசங்கிக்கும் போது குறிப்பாக ஊழியப்பாதையில் அவர்கள் கடந்து வந்த பாதையை முன்னுதாரணமாக வைத்துப் பேசியபோது அனைவரும் தங்களை குயவன் கையில் களிமண்ணாக ஒப்புக்கொடுத்தார்கள். அதன் பின்பு வேதத்தில் உள்ள **"எழுத்துகள்"** என்ற தலைப்பில் தேவ செய்தியைக் கொடுத்து, தேவன் ஒவ்வொருவர் வாழ்விலும் வைத்த திட்டங்களைச் சொன்னபோது, கர்த்தர் அவர்களின் ஆவிக்குரிய கண்களைத் திறந்தார்.

மேலும் **"கைகளை வைக்கும்போது நடக்கும் அற்புதம்"** என்ற தலைப்பில் பேசும்போது தேவனுடைய ஊழியர்கள் பெற்றுக்கொண்ட அபிஷேகத்தைப் புதுப்பித்தது மட்டுமல்லாமல் அவர்களுக்குள் இருக்கும் ஆவிக்குரிய வரங்களினால் அனல் மூட்டப்பட்டார்கள். **"கற்கள்"** என்ற தலைப்பில் செய்தி கொடுக்கும்போது ஆவிக்குரிய ஆழமான சத்தியங்களைக் கற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் எழும்பி பிரகாசிக்கும் ஜீவனுள்ள கற்களாக தேவன் உருவாக்கியதைக் காணமுடிந்தது. ஒவ்வொரு செய்தியின் முடிவில் நடைபெற்ற ஜெபவேளையில் புதிய அபிஷேகத்தையும், புதிய கிருபைகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

மேலும் இந்த முகாமில் **பாஸ்டர். டேனியல்** அவர்கள் **"ஜீவனுள்ள கற்கள்"** என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு ஆராதனை நடத்தியபோது அனைவரும் ஆவியில் புதுப்பிக்கப்பட்டார்கள். **சகோ. ஜெபசிங்** அவர்கள் **"புதிதும் கூர்மையுமான எந்திரமாக்குவேன்"** என்ற தலைப்பில் ஆவியின் பட்டயத்தைக் குறித்து செய்தியளித்தபோது தேவனுடைய வார்த்தையில் உள்ள அபிஷேகம், அதிகாரம், விடுதலை மற்றும் கிருபையைப் பெற்றுக்கொள்ளும்படி ஆவியானவர் அனைவரையும் நிரப்பினார்.

**சகோ. ஜான் வெஸ்லி** அவர்கள் **"ஜெபத்தைப் பற்றியும் விசேஷமாக கெத்சமெனே ஜெபம்"** என்ற தலைப்பில் செய்தியளித்தபோது ஒவ்வொருவரும் ஜெப பாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் இந்த முகாமில் ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு கலாச்சார நிகழ்ச்சிகள், பாடல்கள், நடனங்கள், குறுநாடகங்கள் என தாகோத் பணித்தள அலுவலக ஆண்கள், பெண்கள், Project Staff, மூன்று மாநிலங்களில் உள்ள ஊழியர்களின் குழுக்கள், Training Unit என பலரும் பங்கெடுத்து எல்லோரையும் மகிழ்ச்சியடைய வைத்தார்கள். குறிப்பாக ஷாலோம் Training Unit மூலமாக **"ஜான் கெடி"** மிஷனெரி பசிபிக் தீவுகளில் வாழும் ஆதிவாசி மக்களுக்கு எப்படி சுவிசேஷம் அறிவித்து கிறிஸ்துவுக்காக ஜீவனைத் தந்தார் என்பதை குறுநாடகம் மூலமாக நடித்துக் காட்டியபோது ஆத்துமப் பாரத்துடன் அனைவரும் கண்ணீர் சிந்தி தங்களையும் ஜீவனுள்ள சாட்சிகளாக ஒப்புக்கொடுத்தார்கள். இந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் **சகோ. ஃப்ராங்க்ளின் பென்னட்** அவர்களும் ஒருங்கிணைந்து மிகவும் நேர்த்தியாக நடத்திக் கொடுத்தார்கள்.

இந்த முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் **"இயேசு விடுவிக்கிறார்"** சார்பில் மிக அழகான பேக்குகள் (Bag) மற்றும் ஊழியக்காரிகளுக்கு அழகான பெரிய புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டது. மேலும் **"வேதத்தில் பரிசுத்த ஆவியானவர்"** என்ற தலைப்பில் உள்ள அனைத்து வசனங்களையும் படிப்பறிவில்லாத அநேகர் மனப்பாடமாகப் படித்து ஒப்புவித்தார்கள். சுமார் 100 சுதேச ஊழியர் மனைவிமார்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது.

மேலும் 20 வருடங்களுக்கு மேலாக ஷாலோம் ஊழியத்தில் பணிபுரிந்து வரும் சுதேச ஊழியர்கள் 1) அனில் கனவா (ஹிரோலா, குஜராத்) 2) சந்து டாமோர் (ஹட்மத்கூட்டா, குஜராத்) 3) கண்ணு பாபோர் (மல்வாசி, குஜராத்) 4) வில்சன் சங்காடா (நகரேலா, குஜராத்) 5) மத்தூர் புரியா (விசல்பூர், மத்தியப்பிரதேசம்) 6) பத்தியா கராசியா (கும்பூரா, இராஜஸ்தான்) ஆகியோர்களை **பேராயர். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கௌரவப்படுத்தி சிறப்பு விருதுகளை வழங்கினார்கள். அதுபோல் சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சிறப்பு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த முகாம் நடைபெற்ற நான்கு நாட்களும் அனைவருக்கும் நல்ல உணவு வகை பரிமாறப்பட்டது. எந்த குறைகள், தடைகள் மற்றும் எதிர்ப்புகள் எதுவும் இல்லாதபடி எல்லோருக்கும் நல்ல சுகத்தையும், பிரயாணங்களில் நல்ல பாதுகாப்பையும் தேவன் கொடுத்தார்.

கடைசி நாளில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியத்திற்காகவும், பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும், மாநிலம் மற்றும் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் ஆத்துமப் பாரத்தோடு, கண்ணீரோடு ஜெபங்களை ஏறெடுத்தார்கள். அனைத்து சுதேச ஊழியர்களின் குடும்பங்களும் ஆத்துமப் பாரத்துடன் கண்ணீர் சிந்தி ஜெபித்ததைக் காணும்போது 2020க்குள் மிகப் பெரிய எழுப்புதலை தேவன் கட்டளையிடுவார் என்பதில் சந்தேகமில்லை. கடைசியாக செய்தி வேளையில் பேராயர். தேவதாஸ் தரிசனம் பெற்ற ஊழியனுடைய ஊழியங்கள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது என்பதை விளக்கிக் காட்டினார்கள். தரிசனமானது விசுவாசத்தையும், வல்லமையையும், கிரியைகளையும் தேவனிடத்தில் கொண்டுவருகிறது. ஊழியத்திற்கும், தரிசனம் மிக அவசியமான தேவை என்பதை எடுத்துரைத்தார்கள்.

கடைசியாக, அனைவருக்கும் கர்த்தருடைய பந்தியான திருவிருந்து ஆராதனை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அப்பத்தையும், திராட்சரசத்தையும் பெற்றுக்கொண்டு ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டார்கள். அனைவருக்குள்ளும் தேவன் ஒருமனதின் ஆவியையும், ஒரே சீரமான திருச்சபையில் அங்கமாய் இருக்கிறோம் என்பதை பிரதிப்பலித்தது.

இந்த முகாமின் அனைத்து செலவுகள் மற்றும் 560 ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட வெகுமதிகளுக்கு **"இயேசு விடுவிக்கிறார்"** ஊழியங்களின் மூலம் 7,50,000 நிதி உதவி பெறப்பட்டது. நம்முடைய ஷாலோம் ஊழியத்தையும் பீல் ஆதிவாசி மக்களையும் அதிகமாய் நேசிக்கும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** மற்றும் ஊழியத்திற்காகவும் தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர் தாமே **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் குடும்பம் மற்றும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களை ஆசீர்வதிப்பாராக.

<table>
<tr><td>ஷாலோம்<br>மிஷனெரி ஜெபக்கூடுகை</td><td>நாள்<br>12.01.2014,<br>சனிக்கிழமை<br>நேரம்<br>மாலை 5.00 மணி முதல்<br>7.00 மணி வரை</td></tr>
<tr><td colspan="2">இடம் : ஷாலோம் கிளை அலுவலகம்,<br>M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்</td></tr>
<tr><td colspan="2">அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.</td></tr>
<tr><td colspan="2">தொடர்புக்கு: சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,<br>சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820</td></tr>
</table>


ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் - 2013
முகாமில் தேவன் வல்லமையாக பயன்படுத்திய பாத்திரங்கள்
சொந்த பீல் மக்களின் இரட்சிப்பிற்காக
குடும்பமாக ஜெபிக்கும் சுதேச ஊழியர்கள்

# ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் - 2013



தேவ ஊழியர்களுக்கு கலாச்சார வரவேற்பு



பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தும் Pr. டேனியல் & குழுவினர்



கலாச்சார நடனமாடும் பீல் ஆதிவாசி ஊழியர்கள் மற்றும் ஊழியக்காரிகள்



சிறப்புப் பாடல் – அலுவலக ஊழிய சகோதரர்கள்



சிறப்புப் பாடல் – அலுவலக ஊழிய சகோதரிகள்



மிஷனெரியைக் குறித்த குறு நாடகம்



Choreography



கர்த்தருடைய பந்தி



பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கான சிறப்பு ஜெபம்







அக்கினி அபிஷேக வேளை



தேரே ஜேசா ஹிந்தி CD வெளியீடு



ஷாலோம் பாடல் புத்தக வெளியீடு



வேதாகமத் தேர்வில் வெற்றி பெற்றோருக்கான சிறப்புப் பரிசுகள்



மூத்த சுதேச ஊழியர் குடும்பங்களுக்கு சிறப்பு விருதுகள்



ஊழியர் மனைவிமாருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட வேதாகமங்களுடன்



பேக்குகள் மற்றும் வேதாகமங்களுடன் சுதேச ஊழியர் குடும்பங்கள்

# இயேசு விடுவிக்கிறார் குழுவினரின் பணித்தள வருகை



கலாச்சார வரவேற்பு



இயேசு விடுவிக்கிறார் மூலமாகத் தாங்கப்படும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு சிறப்பு ஜெபம்



பாட்லா கட்ரா – கிராம ஆலயப் பிரதிஷ்டை



சுர்வான் – கிராம ஆலயப் பிரதிஷ்டை



கும்புரா கிராம ஆலயத்தில் செய்தியின் போது



கோப்க்கா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நமது ஷாலோம் பேராலயத்தின் முன்பு





10லட்சம் ஆத்தும அறுவடை திட்டத்திற்காக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட
48 சுதேச ஊழியர்களின் குடும்பங்களுக்கான சிறப்புக் கூடுகை

## ஷாலோம் பணித்தளத்தில் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்கள்

தேவக் கிருபையால் நவம்பர் 22,23,24 ஆகிய தேதிகளில் இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி ஊழியர்கள் சார்பில் **சகோ. ஜெபசிங், சகோ. ஜாண் வெஸ்லி, சகோ. ஜோசுவா** ஆகியோர் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட்டு ஊழியம் செய்தார்கள்.

**22.11.2013** வெள்ளிக்கிழமையன்று நகரேலா கிராமத்தில் 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டத்தின்கீழ் வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறுகின்ற சுகமளிக்கும் கூட்டத்தில் குழுவாகப் பங்குபெற்றார்கள். கட்டப்பட்டிருந்த கூடாரத்திற்குள் சுமார் 800பேர்கள் கூடியிருந்தார்கள். ஆராதனை முடித்ததும் **போதகர் பால்முனியா,** (மத்தியப்பிரதேசம்) அவர்கள் வல்லமையான செய்தியளித்தார்கள். ஜெபவேளையில் வந்திருந்த அனைத்து ஊழியர்கள், ஊழியக்காரிகள், நோய்வாய்பட்டவர்கள், பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களுக்காக ஜெபத்தை ஏறெடுத்தார்கள். கண்கள் காணத்தக்கதாக தேவன் அற்புதங்களை பீல் சுதேச ஊழியர்கள் மூலம் நடத்தியதைக் காணமுடிந்தது. கூட்டம் முடிந்தபின்பு 20 க்கும் மேலான சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டார்கள். சுமார் 25 குடும்பங்கள் புதிதாக தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இதைக் கண்ட இயேசு விடுவிக்கிறார் குழுவினர் வருங்காலங்களில் **சகோ. மோகன் சி. லாசரஸ்**–ஐ போல பீல் சுதேச ஊழியர்களை பல லட்சங்களுக்கு தேவன் ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார் என்று சந்தோஷமாய் கூறினார்கள்.

23 ஆம் தேதி சனிக்கிழமை அன்று பணித்தள அலுவலகம் மற்றும் ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை, பேராயர் அலுவலகம், திருமண்டல பணிகளின் ஒருக்கிணைப்பு ஆகியவைகளைக் கண்டு தேவனைத் துதித்தார்கள். பணித்தள அலுவலக ஊழியர்களுக்கான கூட்டத்தில் **சகோ. ஜாண் வெஸ்லி** அவர்கள் செய்தியளித்தார்கள். மேலும் இயேசு விடுவிக்கிறார் மூலம் தாங்கப்படும் ஊழியர்கள், மாணவர்கள் மட்டுமன்றி, குறிப்பாக 48 சுவிசேஷகர்களின் குடும்பங்களுக்கு **சகோ. ஜெபசிங்** அவர்கள் சிறப்பு செய்தி மற்றும் ஆலோசனை வழங்கினார்கள்.

**24.11.2013** ஞாயிற்றுக்கிழமை அன்று இராஜஸ்தான் மாவட்டத்தில் பாட்லா கட்டாரா **(போதகர். ரத்தன்சிங் கட்டாரா),** மற்றும் சுர்வான் **(போதகர். தினேஷ் கோதா)** ஆகிய கிராம ஆலயங்களை இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் மூலம் கட்டி பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபைத் தந்தார். சபை விசுவாசிகள் ஆவியில் நிறைந்து பாடல்பாடி, நடனமாடி, துதித்து, மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். **சகோ. ஜெபசிங்** அவர்கள் செய்தி அளித்தார்கள். அனைவரும் வசனத்திற்கு தங்களை அர்ப்பணம் செய்தார்கள். அனைவருக்கும் உணவு வழங்கபட்டது.

ஷாலோம் ஊழியத்தில் நடைபெற்ற மிகப்பெரிய பெருக்கத்தை கண்டு தேவனைத் துதித்தார்கள். தொடர்ந்து இன்னும் பலநூறு ஊழியர்கள், ஆலயங்கள் கட்டப்பட ஜெபியுங்கள்.

**நம் தலைமுறையில் நம் தேசத்தில் பீல் மக்கள் தேவனை அறியட்டும்!**



# தேவனைத் துதித்து உங்களுக்கு நன்றி கூறுகிறோம்!



தேவக்கிருபையால் 2013 ஆம் ஆண்டு முழுவதும் ஆசீர்வாதமான ஊழியங்களை மிகச் சிறப்பாக நடப்பிக்க தேவன் கிருபைத் தந்தார். 2013 ஆம் ஆண்டு முழுவதும் எங்களுக்காகவும், ஷாலோம் ஊழியங்களுக்காகவும், பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும் ஜெபித்து, தாங்கி ஆதரித்த உங்கள் குடும்பங்கள், சபைகள், ஊழியங்களுக்காக, குறிப்பாக ஷாலோம் பிரதிநிதிகளுக்காக, Board Members யாவருக்காகவும் Sharing Love Mission மற்றும் Shalom Charity Mission சார்பாக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவன்தாமே உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

விசேஷமாக கிறிஸ்துமஸ் பண்டிகை ஆசீர்வாதங்களுக்கு நிதி உதவி கொடுத்து ஊழியர்கள், ஆதிவாசி மாணவர்களுக்கும் மற்றும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி ஊழியங்களுக்கும் உதவிய உங்கள் இதயங்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை பல ஊடகங்கள் வழியாகவும், எங்களைத் தனிப்பட்ட முறையில் விசாரித்து கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துகள் மற்றும் வெகுமதிகளை அனுப்பின உங்களை வாழ்த்துகிறோம். கிறிஸ்துமஸ் புத்தாண்டு நிகழ்ச்சி விவரங்களை அடுத்த மாத மலரில் வெளியிடுகிறோம்.

விசேஷமாக கிறிஸ்துமஸ் நாட்களில் ஆதிவாசி விசுவாசிகளுக்காக 3500 வேதபுத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த மதிப்பில் விநியோகம் செய்ய உற்சாகத்துடன் ஒரு வேதபுத்தகத்திற்கு ரூ. 100 வீதம் கொடுத்து உதவிய குடும்பங்கள் மற்றும் சபைப் போதகர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறோம். இதைக் குறித்த விவரங்களை அடுத்த மாத மலரில் வெளியிடுகிறோம். அதிகமான வேதபுத்தகங்களை வாங்க உதவினவர்களுக்கு சிறப்பு அறிக்கை அனுப்பி வைக்கிறோம். நல்ல நிலத்தில் விதைத்த விதைகளைப் போல் தேவன் உங்களுக்கு நூறு மடங்கு ஆசீர்வாதத்தை 2014 ஆம் ஆண்டில் கட்டளையிடுவாராக!

அதுபோல தேவன் எங்கள் குடும்பத்திற்குத் தந்த பரம தரிசனமான பீல் மக்கள் இரட்சிப்பின் பணியான ஷாலோம் ஊழியங்களுடன், உடன் ஊழியர்களாக இணைந்து செயல்படும் Sharing Love Mission தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், குஜராத் தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள், Shalom Charity Mission உடன் ஊழியர்கள், பணித்தள Project ஊழியர்கள், Sharon Memorial Mission Hospital ஊழியர்கள் மற்றும் ஷாலோம் முன்னேற்றப் பணியாளர்கள் அனைவருக்காக தேவனை துதிக்கிறோம். **"ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் பிதாவானவர் அவனைக் கனம்பண்ணுவார்"** என்ற இயேசுவின் வாக்கின்படி உண்மையாக ஊழியம் செய்யும் ஒவ்வொருவரையும் தேவன் கனப்படுத்துவாராக!

தொடர்ந்து 2014 ஆம் ஆண்டிலும் உங்கள் யாவரின் ஜெபங்களையும், ஆதரவையும் எதிர்பார்க்கிறோம். வாருங்கள், இணைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் கட்டுவோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# 2014 ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் நம் பாரத தேசத்தின் பாராளுமன்றதேர்தலுக்காக 72 மணி நேர விசேஷித்த மன்றாட்டு ஜெபம்



தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படி இந்த வருடம் நடைபெற உள்ள தேசத்தின் பாராளுமன்ற தேர்தலுக்காக ஆவியானவரின் ஏவிவுதலின்படி National Prayer Alliance அமைப்பின் மூலம் ஜனவரி 29 ஆம் தேதி மாலை 6 மணி முதல் பிப்ரவரி 1 ஆம் தேதி மாலை 6 மணி வரை பாரத தேசத்தில் 72 இடங்களில் 72 மணி நேரம் மன்றாட்டு உபவாச ஜெபம் நடைபெறவுள்ளது.

இம்மாபெரும் உபவாச மன்றாட்டு ஜெபத்தை இந்த அமைப்பின் தலைவரான **Dr. பால் தினகரன்** (இயேசு அழைக்கிறார், சென்னை) மற்றும் செயல்படுத்தும்படியாக **Rev. D. மோகன்** (Senior Pastor, NLAG சபை, சென்னை) மற்றும் அனைத்து கிறிஸ்தவ தலைவர்களும் இணைந்து நடத்த உள்ளார்கள்.

இதற்கான சிறப்பு ஜெபம் மற்றும் திட்டக்கூடுகை டிசம்பர் 16 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணி வரை இயேசு அழைக்கிறார், ஜெபக்கோபுரத்தில் நடைபெற்றது. தேசமெங்குமிருந்தும் பல ஊழியங்களின் தலைவர்கள் மற்றும் சபைப் போதகர்கள், பிஷப்மார்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

விசேஷித்த ஜெபங்களும், திட்டங்களும் ஏறெடுக்கப்பட்டது. தேசமெங்குமுள்ள தலைவர்கள், போதகர்கள் இணைந்து தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், தேர்தலின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்தது மிகச் சிறப்பாக அமைந்தது.

அதன்படி தேசத்தில் 72 இடங்களில் ஒரு ஸ்தலமாக குஜராத்தில் நம் தகோத் பணித்தளத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நம்முடைய அனைத்து ஷாலோம் சபைகள் மற்றும் அனைத்து சபைகளுடன் இணைந்து ஜனவரி 29 இல் இருந்து பிப்ரவரி 1 ஆம் தேதி வரை நடத்த உள்ள இந்த பாராளுமன்ற தேர்தலுக்காக உபவாச மன்றாட்டு ஜெபத்திற்காக ஜெபியுங்கள்.

நீங்களும் உங்கள் பகுதியில் நடைபெறவுள்ள 72 மணிநேர ஜெபத்தில் பங்குபெற்று தேசத்தை, குறிப்பாக பாராளுமன்ற தேர்தலை ஆவியானவர் பொறுப்பேற்று நடத்தும்படியாகவும் அந்தகாரத்தின் வல்லமைகள் அழிக்கப்படும்படியாகவும், ஆண்டவரின் மனதிற்கேற்ற நல்ல பிரதமரையும், மந்திரிமார்களையும், அனைத்து MP களையும் தந்து தேவன் பாரத தேசத்தை ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**“தேசமே பயப்படாதே... மகிழ்ந்து களிகூரு... கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்”.** (யோவேல் 2 : 21)

“என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், ......
அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன். 2 நாளா. 7 : 14

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்திப் பணியில் உங்கள் பங்கு

**(ஜெபித்து, ஷாலோம் ஊழியங்களைத் தாங்க முன்வாருங்கள்)**

- ரூ. 2000/– மாதந்தோறும் அனுப்பி பீல் சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- ரூ. 1000/– செலுத்தி (ஒருமுறை) ஷாலோம் ஆயுட்கால அங்கத்தினராக (Shalom Life Time Partner) இணைய முன் வரலாம்.
- மாதம் ரூ. 500/– செலுத்தி கிராம ஊழியத்தைத் தாங்க முன் வரலாம். (Shalom Village Sponsor)
- மாதம் ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் மிஷன் பங்காளராக முன் வரலாம். (Shalom Mission Partner)
- ரூ. 600/– மாதந்தோறும் அனுப்பி ஒரு ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். (1 ஆண்டிற்கு ரூ. 7,200) (Shalom Charity Mission)
- ரூ. 1 லட்சம் or 2 லட்சம் or 3லட்சம் நிதி உதவி தந்து கிராம ஆலயம் கட்டித் தர முன் வரலாம்.
- ரூ. 100/– வீதம் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ரூ. 4000/– மதிப்பில் பீல் சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ரூ. 40,000/– மதிப்பில் பீல் சுதேச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பி ஊழியத்தை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- இந்த மிஷனெரி பணிக்கு உங்கள் பகுதியில் பிரதிநிதியாக செயல்பட முன் வரலாம்.

# 2014 ஆம் ஆண்டிற்கான

## சிறப்புத் திட்டங்களும் அதன் தேவைகளும்

- 200 புதிய சுதேச ஊழியர்கள்
- 200 புதிய கிராம ஆலயங்கள் (ரூ. 2 இலட்சம் மதிப்பில்)
- 5000 மூப்பர்களுக்கான சிறப்பு முகாம் (10 முகாம்கள்)
- 5000 வாலிபர்களுக்கான சிறப்பு முகாம் (10 முகாம்கள்)
- 500 ஓய்வுநாள் பாடசாலைகள் (30000 மாணவர்கள்)
- 40000 மாணவர்களுக்கான CBC
  (சிறுவர் வேதாகமப்பள்ளி 10 நாட்கள்)
- ஜெபமுகாம்கள், அபிஷேக முகாம்கள்
  (மாநில வாரியாக, பகுதி வாரியாக)
- 10 இலட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின்கீழ் வெள்ளிக்கிழமைதோறும் 12 இடங்களில் 500 சுகமளிக்கும் விடுதலை நற்செய்திக் கூட்டங்கள்
- 500 புதிய ஆதிவாசி மாணவர்களை கல்விப்பணிக்காகத் தாங்குதல்
- 100 ஆதிவாசி மாணவர்களை உயர்கல்விப் படிப்பிற்காக ஆதரித்தல்
- மத்தியப்பிரதேசத்தில் பயிற்சிக்கூடம் கட்டப்படுதல்
  (ரூ. 25 இலட்சங்கள் மதிப்பில்)
- ஷாலோம் ஜெபமையம் (24மணி நேரம்) பீல் மக்கள் இரட்சிப்பிற்காக, தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க
- 10000 விசுவாசக் குடும்பங்களுக்காக வேதபுத்தகங்கள் வழங்குதல்
- பெண்கள் எழுப்புதல் சிறப்பு மாநாடுகள்
- 3 மாநிலங்களில் பள்ளிக்கூடப் பணிகளை ஆரம்பித்தல்

**சுதேச ஊழியரின் சாட்சி**

## போதகர். ஜினு மாவி

**பான்டிகேடி,** குஜராத்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் ஜினு மாவி. நான் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ள பான்டிகேடி கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எனது பாட்டியின் சரீரத்தில் மிகவும் பயங்கரமான எரிச்சல் காணப்பட்டது. இதனால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஒவ்வொரு வாரமும் சுகத்திற்காக பல மந்திரவாதிகளிடம் சென்று அதிகப் பணம் செலவு செய்து பூஜைகள் செய்தோம். ஆனாலும் ஒரு பலனும் இல்லை. இவருடைய கிராமத்தைச் சேர்ந்த மன்சு சௌகான் என்பவர் கட்லாவ் கிராமத்தில் ஷாலோம் மூலமாக நடைபெறும் கூட்டத்தில் பங்கு கொள்பவர். இவர் இயேசுவைப் பற்றிக் கூறி, எனது பாட்டியை அந்த சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஜெபத்தின் மூலம் விடுதலை கிடைத்தது.

அது முதல் எனது பாட்டி இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்தார்கள். பின்பு எனது தந்தை பூனம் பாய் அவர்களும் விசுவாசியானார். விசுவாசத்திற்குள் வந்த பிறகு வீட்டில் இருந்த சுமார் 20 க்கும் மேற்பட்ட தேவதைகளின் படங்களைத் தூக்கி எறிந்து விட்டார்கள். பின்பு 1996 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு புதன் கிழமையும் ஷாலோம் ஊழியர் எங்கள் வீட்டில் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். பின்பு நானும் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்து, வேதாகமத்தை விரும்பிப் படித்தேன். நான் 12 ஆம் வகுப்பு முடித்த பிறகு வேதாகமக் கல்லூரியில் C. Min., முடித்தேன். அதன் பின் B.Th., படித்து முடிக்க தேவன் கிருபைச் செய்தார்.

2000 ஆம் ஆண்டில் என் வாழ்க்கையை ஊழியம் செய்வதற்கென்று அர்ப்பணித்து, எனது சொந்த கிராமமான பான்டிகேடி கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். தற்போது 40 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள். கடோய் என்ற கிளை சபையில் 25 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது ஷாலோம் பான்டிகேடி சபையின் போதகராக குடும்பமாக நன்றாக ஊழியம் செய்து வருகிறோம். எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும், நான் செய்துவரும் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Industrial Employees Prayer Fellowship, Chennai.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!



ஷாலோம் கிராம ஆலயம்

# சுர்வான்

## இராஜஸ்தான்

நான் இராஜஸ்தானிலுள்ள சுர்வான் என்ற மிகவும் பின் தங்கிய கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசுவை அறியாதவனாய் வாழ்ந்த காலத்தில் அதிக பாவத்தில் சாராயம், பீடி போன்றவற்றிற்கு அடிமையாய் வாழ்ந்து வந்தேன். எனது திருமணத்திற்குப் பின்பு என் மனைவி அதிக சுகவீனம் அடைந்தாள். அவளுடைய சரீரம் மிகவும் மோசமானது. குழந்தை பாக்கியமும் எங்களுக்கு இல்லை. எனது மனைவிக்காக அதிக மந்திரவாதங்களும், மருத்துவங்களும் பார்த்து, அதிக செலவு செய்தும் கூட சரியாகவில்லை. பின்பு எனது அக்காவின் (சித்தப்பா மகள்) கணவர் வாக்ஜி நினாமா என்பவர் அமளிப்பாடா கிராமத்தைச் சேர்ந்த ஷாலோம் சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த அவர் எனக்கு சுவிசேஷம் சொல்லி எனது மனைவிக்காக பாரத்தோடு ஜெபித்தார்.

அந்த நாளிலிருந்து எனது மனைவிக்கு வியாதியிலிருந்து விடுதலையும், குழந்தைப் பாக்கியமும் கிடைக்க தேவன் கிருபைச் செய்தார். எங்களுக்கு இப்பொழுது 3 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். இதன்பின் 2008 ஆம் ஆண்டில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவத்திலிருந்து விடுதலை பெற்றேன். பின்பு 2009 இல் இயேசுவுக்கு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் நடைபெற்ற வேதாகமப் பயிற்சியில் பங்கு பெற்று வேதத்தைக் கற்றேன்.

பரிசுத்த ஆவியில் அபிஷேகம் பெற்று எனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். அப்போது அதிக எதிர்ப்பு வந்து எங்கள் மேல் கற்களை எறிந்து, பெய்யான குற்றச்சாட்டுக்களை எங்கள் மேல் போட்டு அதிகமாய் துன்பப்படுத்தினார்கள். ஆனாலும் தேவன் எங்களோடு கூட இருந்து எங்களை நடத்தினார். இப்போது 38 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு தேவனை ஆராதித்து வருகிறார்கள். மற்றும் பக்கத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் சபைக்கு வருகிறார்கள். இந்த மாதம் 24–11–2013 அன்று தேவ நாமம் மகிமைப்படும்படியாய் என்னுடைய கிராமத்தில் பெரிய ஆலயம் கட்டப்பட்டு சகோ. ஜெபசிங் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாய் கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 2 லட்சம் மூலம் கட்டப்பட்டுள்ளது. தேவனுக்கே மகிமை!



# ஷாலோம் மற்றும் CBN ஸ்தாபனமும் இணைந்து, பீல் ஆதிவாசி ஜனங்கள் வசிக்கும் கிராமங்களிலுள்ள 25 இடங்களில் குடிநீருக்காகப் போடப்பட்ட ஆழ் குழாய் கிணறுகளும் கைப் பம்புகளும்



கைப்பம்பு பராமரிப்பு விளக்கம்



போர்கேடா கிராமத்தில்



கடோயி கிராமத்தில்



கட்லா கிராமத்தில்



உச்வானியா கிராமத்தில்



ரெட்டியா கிராமத்தில்





## பீல் ஆதிவாசி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

சில ஆண்டுகளுக்கு முன்பு மத்தியப்பிரதேசத்தில் டேபர் என்ற கிராமத்தில் ஊழியம் செய்யச் சென்றபோது குடிப்பதற்காகத் தண்ணீர் கேட்டவுடன், சுமார் அரைமணி நேரம் கழித்துக் கொண்டு வந்து கொடுத்த அந்தத் தண்ணீர் மிகக் குளிர்ச்சியாக இருந்ததால் ஆச்சரியத்துடன் எப்படி எங்கிருந்து கிடைத்தது என்று கேட்டேன்.

அந்த விசுவாசிப் பெண் சுமார் அரை கிலோமீட்டர் தூரத்திற்கு என்னை அழைத்துச் சென்று, தண்ணீர் அதிகமாய் இல்லாத நதி ஓரத்தில் குழி தோண்டி தண்ணீர் எடுப்பதைக் காட்டினாள். அதற்கு அருகில் ஆடு மாடுகளும் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. சில ஜனங்களும் குளித்தும் துவைத்தும் கொண்டிருந்தார்கள்.

எனக்குக் குடிக்கக் கொடுத்த தண்ணீரை கண்ணாடி டம்ளரில் ஊற்றிப் பார்த்த போது சின்னச், சின்ன அநேகக் கிருமிகள் கீழே படிந்திருப்பதைக் கண்டேன். இப்படியாகப் பல ஆயிரம் கிராமங்களில் குடிக்கத் தண்ணீரின்றி வேதனைப்படுவதைக் கண்டு கண்ணீருடன் ஜெபித்தோம்.

தேவக் கிருபையால் ஹைதராபாத்தில் உள்ள CBN ஸ்தாபனத்தின் மூலமாக கடந்த சில ஆண்டுகளாக நம்முடைய சபைகள் உள்ள கிராமங்களில் ஆழ் குழாய் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் குஜராத் தாகோத் மாவட்டத்தில் 25 கிராமங்களில் Hand Pump வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. ஆக மொத்தம் இதுவரை சுமார் 200 கிராமங்களுக்குக் குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

CBN பணியாளர்கள் **சகோ. சாமுவேல்** மற்றும் ஷாலோம் **போதகர் சுரேஷ் கட்டிலா** போன்றோர்கள் பொறுப்பாக இருந்து ஊழியங்களை நிறைவேற்றினார்கள். CBN ஸ்தாபனத்திற்காக தேவனைத் துதித்து அவர்கள் ஊழியங்கள் பாரத தேசத்தில் சிறந்து விளங்கவும் இன்னும் குடிநீர் பற்றாக்குறையுள்ள கிராமங்களில் தொடர்ந்து, குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் அனைவரும் ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## ஜெப விண்ணப்பம்

உங்களுக்காக ஜெபிக்க வேண்டுமானால் தங்களின் ஜெபக்குறிப்புகளை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு காலை 10 மணி முதல் மாலை 5.30 மணிக்குள் எங்களோடு தொடர்பு கொண்டு தெரியப்படுத்தினால் உங்களுக்காக நாங்கள் பாரத்தோடு ஜெபிக்கிறோம்.

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr.** மன்னு டாமோர் — அப்லோடு

ரமலிபேன் என்ற சகோதரியின் மகள் காய்ச்சலினால் அவதியுற்று வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரணமாய் விடுதலை கொடுத்தார்.

**Pr. சுரேஷ் J. டாமோர்** — **தணசியா**

ரோவின்பாய் என்ற சிறுவன் டி.பி வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தார். இந்த வியாதி மாறும்படியாக ஜெபிக்கவே, தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. விசியா P. மாவி** — **குந்திகேடா**

காளிபேன் என்பவர் பிசாசு பிடியினால் 10 நாட்கள் சிரமப்பட்டு வந்தார். இவரை நம் தேவாலயம் கொண்டு வந்து இவருக்காக ஜெபித்த போது, தேவன் அற்புத விடுதலை கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. கோம்சிங் கராசியா** — **ரோகனியா மெகாஜி**

ஹர்ஜிபாயின் எருமை மாடு வியாதியிலிருந்தது. வேறு எந்த வருமானமும் இல்லாத இவர் இந்த மாட்டை வைத்து பிழைப்பு நடத்தி வந்தார். வியாதியடைந்த மாட்டை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் நமது ஊழியர் ஜெபித்தவுடன் மாட்டின் நோய்கள் மாறியது.

லக்கு என்ற சகோதரி நிமோனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்தில் இவருக்காக ஜெபித்த போது, தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

பிசாசு பிடியில் அவதியுற்ற அனிதா என்ற சகோதரிக்காக ஜெபித்த போது, தேவன் பூரண விடுதலையைக் கட்டளையிட்டார்.

**Pr. காக்ரா R. தாமா** — **வாசுனி**

ஹீத்தா என்ற சகோதரரை தேள் கடித்துவிட்டது. ஊக்கமாய் ஜெபித்த போது வேதனைகளை தேவன் மாற்றினார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. கோர்சிங் D. புரியா** — சாரேல்

பிரிஜய் பிட்டா என்பவருடைய சகோதரிக்கு பிசாசு பிடியினால் பயம், நடுக்கம் ஏற்பட்டு, மிகுந்த சிரமப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது, தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. சாமரியா N.பாகேல்** — **சாந்தா**

டி.பி நோயினால் பஹேல் பரிவால் என்பவர் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு வந்தார். பாரத்தோடு இவர்களுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

பாத்து என்பவருக்குக் காது கேளாமலிருந்தது. இவருக்காக ஜெபித்த போது, இவருக்குப் பூரணமாய் காதுகள் கேட்கும்படி தேவன் கிருபை செய்தார்.

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- இந்தப் புதிய ஆண்டில் தேவன் நமது வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் தருகின்ற வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் நிறைவேற்றவும், இந்தப் புதிய ஆண்டு மிகவும் ஆசீர்வாதமான ஆண்டாக அமையவும், இந்த ஆண்டில் தேவன் ஊழியப்பாதையில் தந்துள்ள அனைத்து திட்டங்களை நிறைவேற்ற கிருபை தரவும் ஜெபியுங்கள்.
- பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் கலந்து கொண்டு அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.
- Shalom Charity Mission மூலமாக தாங்கப்பட்டு வரும் பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் நல்ல ஞானத்தைத் தந்து ஆசீர்வதிக்கவும், அவர்களின் கல்வித் தேவைகளைச் சந்திக்கவும், ஆதரவாளர்கள் இல்லாத மாணர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.
- இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் சுமார் 7000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/– ஆகும். 7000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.
- **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 10

**பதில் எழுதுக :**

1. குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுத்தவன் யார்?
2. ஞானிகளுக்கு எது செல்வம்?
3. எல்லா ஜாதிகளுக்கும் விரோதமான நாள் எது?
4. காலேபு யாருடைய குமாரன்?
5. இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்ட புத்திரன் யார்?
6. பூமியை சுதந்தரித்துக் கொள்பவர்கள் யார்?
7. ஜெபம் பண்ணும் போது யாரைப் போல வீண் வார்த்தைகளை அலப்பக்கூடாது?
8. “விசுவாசித்தவளே பாக்கியவதி” இருப்பிடம் கூறு?
9. இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு அபத்தமாய்ப் போவது எது?
10. முதலாம் குடிமதிப்பு எப்போது உண்டாயிற்று?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.01.2014**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. ஆத்தும நங்கூரம் (எபி. 6 : 19)
2. ஆசா (1 நாளா. 9 : 16)
3. அகங்காரிகள், அக்கிரமஞ் செய்கிறவர்கள் (மல். 4:1)
4. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை (1 தீமோ. 1 :15)
5. திறக்கப்படுவாயாக (மத். 7:34)
6. சீலோவாமிலே (லூக். 13 : 4)
7. பேலிக்ஸ் (அப். 24 : 26)
8. ரட்சிப்பின் நம்பிக்கை (1 தெச. 5 : 8)
9. சிப்போரின் குமாரன் (எண். 22 : 10)
10. பெத்பேயோருக்க எதிரான பள்ளத்தாக்கில் (உபா. 34 : 6)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 9 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. கரோலின் ஜெல்சிங்**, சென்னை. **2. Sis. ஜெபக்கனி**, சங்கரன்கோவில்

**3. Bro. டேவிட் எபனேசர்**, நாசரேத்

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK** — **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

**ICICI Bank** — **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

தென்னாப்ரிக்காவின் தந்தை என்றழைக்கப்படும், தென்னாப்ரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கடந்த டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி மரணமடைந்தார். இவருக்கு உலகெங்கிலிருந்தும் அரசியல் தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தினார்கள்.

---

மைக்ரோப்கள் எனப்படும் நுண்ணுயிர்கள் ஒருவேளை செவ்வாய் கிரகத்தில் வாழ்ந்திருந்தால், அவைகள் வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலையைத தந்திருக்கக்கூடிய ஒரு வறண்ட ஏரியை ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் நாசா நிறுவனத்தின் க்யூரியாசிட்டி உலாவி வாகனம் அனுப்பிய புகைப்படங்களும் தகவல்களும் காட்டுகின்றன. கிமோலித்தோ ஆட்டோட்ரோப்ஸ் என்ற இந்த நுண்ணுயிர்கள் வாழ வெளிச்சம் தேவைப்பட்டிருக்காது என்று கூறும் விஞ்ஞானிகள் அவை பாறைகளையும் கனிமங்களையும் உடைத்து தாம் வாழத் தேவையான சக்தியைப் பெற்றிருக்கும் என்று கூறுகின்றனர்.

---

2007 ஆம் ஆண்டிலிருந்து உலக சதுரங்க சாம்பியனாக இருக்கம் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை நார்வே நாட்டைச் சார்ந்த 22 வயதான மேக்னஸ் கார்ல்சன் தோற்கடித்து உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். சென்னையில் நடந்த இந்த 12 போட்டித் தொடரில், மூன்று போட்டிகளில் வென்று, ஏழு போட்டிகளை சமன் செய்ததன் மூலம் கார்ல்சன் இந்த சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

---

இந்திய மக்களவையிலும் பெரும்பான்மை ஆதரவுடன் புதிப்பிக்கப்பட்ட லோக்பால் மசோதா நிறைவேறியது. இந்த மசோதா, அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக எழுப்பப்படும் ஊழியர் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சுயாதீனமான அதிகாரங்கள் கொண்ட நிறுவம் ஒன்றை உருவாக்கும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அன்னா ஹசாரே அவரது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். நன்றி : www.bbc.co.uk


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.


Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



ஷாலோம் கிராம ஆலயம்

# பாட்லா கட்டாரா

## இராஜஸ்தான்

நான் இராஜஸ்தானில் பாட்லா கட்டாரா என்ற மிகவும் உள்ளடங்கிய கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறியாதவனாய் இருந்த போது, எனது சரீரத்தில் வியாதியினால் அவதிப்பட்டேன். பிசாசினால் அதிகமாய் தாக்கப்பட்டு எனது ஒரு கையும் இரண்டு கால்களும் செயழிழந்து காணப்பட்டது. இடுப்பிற்குக் கீழ் எந்தப் பெலனும் கிடையாது. எவ்வளவோ மருத்துவமும், மந்திரவாதமும் பண்ணியும் அதிகமாய் செலவு செய்தும் எந்த மாற்றமும் இல்லாமல் வேதனையான வாழ்க்கை வாழ்ந்தேன்.

அப்போது எனது அக்கா ஹடி பேன் போர்பாட்டோடு என்ற கிராமத்திலுள்ள ஷாலோம் சபையின் விசுவாசி. அவர்கள் மூலமாக அந்த சபையில் நடைபெற்ற இரவுக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அந்தக் கூட்டத்தில் ஊழியர் எனக்காக ஜெபித்தார். அந்த நிமிடமே நான் சுகமடைந்தேன். எனது கை மற்றும் கால்களில் பெலன் உண்டாயிற்று. பின்பு இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசியாகி தவறாமல் தாட்கா என்ற ஷாலோம் சபையில் 3 வருடம் விசுவாசியாக இருந்தேன். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டேன்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் எனக்குள்ளே ஏற்பட்டு 2001 ஆம் வருடம் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். இப்போது அந்த சபையில் சுமார் 35 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதித்து வருகிறார்கள். இன்னும் வேறு இரண்டு கிராமத்திலும் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. முன்பு ஒரு சிறிய ஆலயம் கட்டி 10 வருடம் அதில் ஆராதனை நடத்தி வந்தோம். இப்போது பெரிய அளவில் புதிய ஆலயம் கட்டப்பட்டு 24–11–2013 அன்று சகோ. ஜெபசிங் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்** (நாலுமாவடி) மூலமாக கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 2 லட்சம் மூலம் கட்டப்பட்டது. தேவனுக்கே மகிமை!

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**


A Relaxed Mind, A Joyful Spirit,
A Peaceful Soul, and A Heart full of Love -
Wish you all get everything in this
New Year
HAPPY NEW YEAR - 2014
புத்தாண்டு வாழ்த்துக்கள்
Rt. Rev. Dr. V. Devadass & Family
Shalom Pastors & Bhil Evangelists
Field & Head Office Staff of Shalom